

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் அவர்கள் சந்தித்து பேசினார். உடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் கனகராஜ், மாநில குழு உறுப்பினர் ஆறுமுக நயினார் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.7.2025) மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் சந்தித்து, மயிலாடுதுறையில் 16.7.2025 அன்று நடைபெற்ற அரசு விழாவில், மீனவர்களின் நலனிற்காக தரங்கம்பாடி வட்டத்தில் இருக்கும் தாழம்பேட்டை மற்றும் வெள்ளக்கோயில் கிராமங்களில் கடற்கரையோர கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும், திருமுல்லை வாசல், மீனரங்கதரத்தில் மேல் கல்சுவர், நீட்டிப்பு மற்றும் தூர்வாருதல் பணி மேற்கொள்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும், பூம்புகார் மீன்பிடி துறைமுகத்தில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும் போன்ற பல்வேறு அறிவிப்புகளை அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்து, கோரிக்கை மனு அளித்தனர். உடன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா எம். முருகன், மு. பன்னீர்செல்வம் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

## முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளை மு.க.முத்து மறைவு!

# முதல்வர் மு.க.ஸ்டாலினை - சீமான் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்!

### ‘ஆம் ஆத்மி’ கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோரும் முதல்வரைச் சந்தித்து ஆறுதல்!

சென்னை, ஜூலை 22 - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் மூத்தசகோதரர்மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.7.2025) முகாம் அலுவலகத்தில், நாம் தமிழர் கட்சியின்தலைவர்சீமான், கொள்கை பரப்புச் செயலாளர் சாட்டை துரைமுருகன், ஒருங்கிணைப்பாளர் தேவா, செய்தித் தொடர்பாளர் பாக்கியராஜ் மற்றும் நிருவாகிகள்;

**ஆம் ஆத்மி கட்சி**

தமிழ்நாடு மாநில ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் வசீகரன், மகளிர் அணி தலைவிதிருமதிஸ்டெல்லா, வர்த்தகர் அணி செயலாளர் ஜாகீர் மற்றும் நிருவாகிகள்;

**டி.வி.எஸ். நிறுவனத் தலைவர் - வேணு சீனிவாசன்**

டி.வி.எஸ். நிறுவனத்தின் தலைவர் வேணு சீனிவாசன் மற்றும் அவரது மனைவி திருமதி மல்லிகா சீனிவாசன்ஆகியோர் சந்தித்து, ஆறுதல் தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.7.2025) முகாம் அலுவலகத்தில், நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான், முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி சந்தித்து, ஆறுதல் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நாம் தமிழர் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் சாட்டை துரைமுருகன், ஒருங்கிணைப்பாளர் தேவா, செய்தித் தொடர்பாளர் பாக்கியராஜ் மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர்.

